**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 158 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திருமதி.நித்யா

Date : 09.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5) கார்த்திகேயன் தரப்பினருக்கும், 1ம் பிரதிவாதி சத்தியமூர்த்திக்கும் என்ன பரிவர்த்தனை நடந்தது என்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் 3வது பத்தியில் மறத்து பேசி வாதிகள் வழக்கு நடத்துவது தவறு தான் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். சத்தியமூர்த்தி வா.சா.ஆ.4ல் கிரைய பத்திரத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளரா, தமிழில் கையெழுத்து போட்டுள்ளரா என்றால் சாட்சியிடம் வா.சா.ஆ.4ஐ காட்டி கேட்ட போது பார்த்து விட்டு தமிழில் கையெழுத்து போட்டுள்ளதாக கூறுகிறார். வா.சா.ஆ.4ல் சத்தியமூர்த்தி அவரது மொபைல் எண் 9965581505 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கார்த்திகேயன் வகையறாவிற்கும் சத்தியமூர்த்திக்கும் வா.சா.ஆ.4 கடனுக்காக ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 மறு கிரைய ஒப்பந்த பத்திரம் சத்தியமூர்த்தி தமிழில் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் சத்தியமூர்த்தி அவரது மொபைல எண 9965581505 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6) வா.சா.ஆ.6 எனக்கு சத்தியமூர்த்தி எழுதி கொடுத்த கிரையபத்திரத்தில் சத்தியமூர்த்தி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் தமிழில் கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ.4ல உள்ள சத்தியமூர்த்தியின்

கையெழுத்தும், வா.சா.ஆ.6ல் உள்ள சத்தியமூர்த்தியின் கையெழுத்தும் வேறுபடுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் சத்தியமூர்த்தி அவரது மொபைல் எண் 9443081505 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6ல் உள்ளது சத்தியமூர்த்தியின் கையெழுத்தே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4ல் உள்ள சத்தியமூர்த்தியின் கையெழுத்தும், வா.சா.ஆ.6ல் உள்ள சத்தியமூர்த்தியின் கையெழுத்தும் மாறுபடுகிறது என்றால் வருடத்திற்கு வருடம் மாறுபடுகிறது. சத்தியமூர்த்தி எனக்கு எழுதி கொடுக்கவே இல்லை என்றால் சரியல்ல.

7) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் வாதிகளின் பெயருக்கு 1ம் பிரதிவாதி ஒரு மறுகிரைய பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், ஆனால் அது தவறு. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 2, 3, 4 பக்கத்தில் நான் மறுத்தளித்த சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது என்றால் கார்த்திகேயனுக்கும், சத்தியமூர்த்திக்கும் நடந்த பரிவர்த்தனை பற்றி தெரியாது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5வது பக்கத்தில் 2வது பாராவில் குறிப்பிட்டுள்ள பி.சா.ஆ.11 ரசீது ராமியம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் செயலாளர் சார்பதிவாளர் அருருக்கு பாலு மனைவி முருகம்மாள் (எ) சாந்தி, கார்த்திகேயன் அவர்கள் சங்கத்தில் கடனை பெற்று அதனை தீர்த்து விட்டதாக செல் ரசீது பதிவு செய்ய வந்துள்ளனர் எனவும், மேற்படி கடன் அசல் ஆவணம் அவர்களிடம் உள்ளதாகவும், ரசீது கொடுக்குமாறு கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எல்லாமே சான்றிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். ராமியம்பட்டி

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் செயலாளர் என்னிடம் பணத்தை நான் செலுத்தியதால் அசல் ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்தார். கார்த்திகேயனிடம் ஒப்படைக்க வேண்டிய அசல் ஆவணத்தை நான் ஏமாற்றி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சத்தியமூர்த்தியை விசாரணை செய்கிறேனா என்றால் விசாரிக்கிறேன். தாவா சொத்தில் கார்த்திகேயன் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும், நான் அனுபவத்திலே இல்லை என்றாலும் சத்தியமூர்த்தி கார்த்திகேயன் குடும்பத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக என் பெயரில் மோசடியான கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும் சத்தியமூர்த்திக்கும் ஏற்பட்ட ஆவணம் சட்டபடியாக செல்லாது, ரத்தாக வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும் சத்தியமூர்த்திக்கும் ஏற்பட்ட பரிவர்த்தனைகளுக்கும், வாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.
Additional District Judge,
Dharmapuri.